## அலகு - 1 (AT)

# குறிஞ்சிமலர்

### அலகு அறிமுகம்

இயற்கையின் அற்புதமான படைப்புகளுள் மனிதனும் ஒருவன். மனிதன் தோன்றிய காலம் முதல் இயற்கை அவனுக்கு வாழ்வாதாரமாக இருந்து அவனைப் பாதுகாத்து வருகிறது. இயற்கையோடு இணைந்து வாழும் வாழ்க்கை மனிதனுக்கு எவ்வித தீங்கினையும் ஏற்படுத்தவில்லை என்பதை பண்டையத் தமிழ் இலக்கியங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. திணை அடிப்படையிலான சங்ககால வாழ்க்கைமுறை மிகவும் இன்பமுடையதாக அமைந்திருத்தலை அக வாழ்க்கையில் தலைவன் தலைவியின் கூற்றுகள் வாயிலாக அறியமுடிகிறது.

இயற்கை மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் தந்து, அவனை வளமாக வாழவைக்கிறது. இதன் அடிப்படையில் காலம் தோறும் பல்வேறு இலக்கியங்கள் படைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. வரலாற்றடிப்படையில் நோக்கும் பொழுது சங்ககாலம் முதல் தற்காலம் வரை எல்லா இலக்கியவடிவங்களிலும் இயற்கை பாடுபொருளாக அமைந்திப்பதைக் காணமுடியும். எனவே இயற்கையைப் பாதுகாத்தல் மனித வாழ்விற்கு இன்றியமையாததாகிறது. அத்தோடு மனிதன் இயற்கையை நேசிப்பதால் அவன் வாழ்வில் நிகழும் மாற்றங்களை நேசிப்பதால் அவன் வாழ்வில் நிகழும் மாற்றங்களை வருணித்துக் கூறுதலும் இலக்கியப்படைப்பே.

சீர்மிகு இயற்கையை மனிதன் தன் தேவைக்காக அழித்துவிடுகிறான். இதனால் சிதைவுறும் இயற்கை மீண்டும் அவனுக்கே பல தீய அழிவுகளைத் திருப்பித் தருகிறது. இயற்கைக்கு அரணாக விளங்கும் மலைவளங்களை அழித்துவருதல் அண்மைக்காலத்தில் மிகவும் பெருகிவருகிறது. இந்நிலைத் தொடராமல் மலைவளங்களைப் பாதுகாக்க வேண்டியது வரும் தலைமுறையின் தலையான கடமையாகும். இயற்கையைப் பாதுகாக்க வேண்டுமெனில் மலைவாழ் உயிரினங்களைக் காக்கக வேண்டுமென்ற மனப்பான்மையை மாணவர்களிடையே வளரச் செய்வதே இவ்வலகளின் நோக்கமாகும்.

| கருத்துகள்/திறன்கள் | கற்றல் செயல்பாடுகள் | துணைக்கருவிகள் | கற்றல் அடைவுகள் | மனோபாவம் |
|---|---|---|---|---|
| • வளங்கள் நறைந்ததும் வாழிடமுமான இயற்கையைப் பாதுகாத்தல் நமது தேவையாகும்.<br>• இயற்கை அரணாகவும் உயிரினங்களின் உரைவிடமாகவும் மலைகள் பயன்படுகின்றன.<br>• குறிஞ்சி நிலத்தில் காண்ப்படும் ஆபூர்வ விலங்குகளை யும் தாவரங்களையும் பற்றஇய அறிவைப் பெறுதல்.<br>• இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மலைகள் பற்றிய செய்திகளை அறிந்து கொள்கிறார்கள்.<br>• இயற்கையோடு இணைந்த வாழ்வே இன்பமயமனது.<br>• பாறைகளை உடைக்கும் சட்ட மீறல்களுக்கு எதிராக செயல்பாட வேண்டும் என்று அறிதல். | • மலை என்ற கவிதையின் இரசனைக் குறிப்பு எழுதுதல்.<br>• மலைகள் பற்றியும் இயற்கை பற்றியும் கவிதை எழுதுதல்.<br>• மலைகளுக்குச் சென்று வந்த அனுபவத்தைப் பயணக் கட்டுரை யாக எழுதுதல்.<br>• குற்றாலக் குறவஞ்சி இராமயணம் ஆகிய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மலைகள் பற்றிய செய்திகளைக் குறிப்பாக எழுதுதல்.<br>• இயற்கையோடு இணைந்த வாழ்ந்த அப்பச்சி என்ற தாத்தாவின் பாத்திரப் படைப்பை ஆய்ந்து விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.<br>• சட்டத்தை மீறி பாறைகளை உனப் பதால் ஏற்படும் தீமைகளைக் கருத்தில் கொண்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகாரிக்குப் புகார் கடிம் எழுதுங்கள். | • மலைத் தொடர்பான புகைபேடங்கள், குறுந் தட்டுகள், கவிதை.<br>• மலையாருவிகள் மலை வாழ் உயிரினங்களின் புகைப்படங்கள், மலை வளங்கள் தொடர்பான குறுந்தட்டுகள், கவிதைகள்.<br>• குறுஞ்சி மலர், வரையாடு பற்றிய குறுந்தட்டுகள், புகைப்படங்கள், பத்திரிகைச் செய்திகள்.<br>• கட்டுரைகள், இதழ்கள், காப்பியங்கள், சிற்றிலக் கியங்கள்.<br>• கதைகள், செய்தித் துணுக்குள், குறுந்தட்டுகள், படங்கள்.<br>• பத்திரிகைச் செய்திகள், செய்தித் துணுக்குள், கட்டுரைகள், இதைழ்கள், படக்காட்சிகள். | • இயற்கையை இரசித்து நமயம் பாராட்டி எழுத அறிகிறார்கள்.<br>• கற்பனை நயத்துடன் வருணனை செய்து கவிதை எழுதுகிறார்கள்.<br>• அதிசய மலைகளையும் அபூர்வ மலர்களையும் அறிந்து எழுதுகிறார்கள்.<br>• இலக்கியங்களில் கூறப்படுள்ள மலகளின் கதைகள், கவிதைகள் போன்றவற்றை அறிந்து எழுதுகிறார்கள். | • மலைகளை நேசிக்கக் கற்றுக் கொள்ளுதல்.<br>• இயற்கையை போற்றும் எண்ணம் தோன்றுகிறது.<br>• மலைப் பகுதிகளுள்ள ஆர்வ் விலங்குகளையும் தாவரங்களையும் பாதுகாக்க வேண்டுமென உணர்கிறார்கள்.<br>• மலைகளிலுள்ள அரிய செல்வங்களை அறிவதன் மூலம் இத்தகைய இலக்கியங்களை நேசிக்கிறார்கள்.<br>• இயற்கை அழிவுக் காரணமானவர்களுக்கு எதிராகப் போராட நினைத்தல். |



**நேரம்:**

இவ்வலகை கற்பிக்கத் தேவையான காலம் 20 பிரிவு வேளைகள். (சுமார்)

## கற்றல் துணைக் கருவிகள்



- மலைகளின் படங்கள், குறுந்தட்டுகள், புகைப்படச்சுருள்.
- மலைவாழ் உயிரினங்களின் குறிப்புகள்.
- இயற்கைப் படக்காட்சிகள்.
- தொடர்புடைய கதைகள், கவிதைகள், கட்டுரைகள்
- 

## நுழைவுச் செயல்பாடு



இவ்வலகில் வரும் பாடப்பகுதிகளை அணுகுவதற்கும் மாணவர்கள் பாடப்பகுதிகளை எளிதில் புரிந்து கொள்வதற்கும் நுழைவுச் செயல்பாடு துணைபுரியும். இது போன்ற செயல்பாடுகளை ஆசிரியர் திறன்களுக்கேற்ப அமைத்துக் கொள்ளலாம்.

மலைப்பயணம் தொடர்புடைய குறுவினாக்களை மாணவர்களிடம் கேட்டறிந்து உரையாடல் செய்வதன் மூலம் மூலிகைப் பொருட்கள் போன்றவற்றைக் கூறச் செய்தல். சங்ககாலம் குறிப்பிடும் ஐவகை நிலங்களில் ஒன்றான குறிஞ்சி நிலத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தச் செய்தல். பாறைகள் உடைக்கப்படும் பத்திரிக்கைச் செய்திகளைக் கொடுத்தல், விவாதித்தல்.

இயற்கையின் அரணாக அமைந்துள்ள இக்குறிஞ்சிநிலம் இன்று அழிக்கப்பட்டுவருவது கண்கூடான ஒன்றாகும். எழில் கொஞ்சும் மலைகளின் அழகும் இம்மலைகளைப் பாதுகாப்பதற்கான தேவைப்பற்றிய கருத்துக்களடங்கிய இவ்வலகிற்குள் செய்யலாம். ஆசிரியரின் விருப்பத்திற்கேற்ப நுழைவுச் செயல்பாடுகளை மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

### மலை

மாணவர்கள் கவிதையை தனியாக வாசிக்கிறார்கள். குழுவாக மெட்டமைத்துப் பாடுகிறார்கள். பாடலில் பிடித்த வரிகளை தேர்ந்தெடுக்கிறார்கள். அதற்கான காரணம் கூறுகிறார்கள். அகராதியின் துணையுடன் கடினச் சொற்களுக்கான பொருள் எழுதுகிறார்கள்.

### பாடலுக்கு மெட்டமைத்தலை மதிப்பிடுதல்

- பொருத்தமான மெட்டு
- பொருள் சிதைவின்மை
- தாளம்
- உச்சரிப்பு
- குரல்வளம்
- சிறிய அங்க அசைவுகள்

இதுபோன்று கருத்துகளமைந்த ஒன்றிரண்டு பாடல்களை சேகரித்து வரச் செய்தல். மாணவர்கள் சேகரித்து வந்த பாடல்களைத் தொடர்மதிப்பீட்டிற்கு உட்படுத்துங்கள்.

**மலைபற்றி கவிதை:**

குயில் கூவிக்கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த மயில் ஆடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்ற ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு; பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தோறும் சென்றதே னீக்கள் இருந்தபடி இன்னிசைபாடிக்களிக்கும்; வேட்டுவர் பெண்கள் விளையாடப் போவதுண்டு; காட்டு மறவர்களும் காதல்மண் செய்வதுண்டு; நெஞ்சில் நிறுத்துங்கள்; இந்த இடத்தைத்தான் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்று சொல்லிடுவார்.

- கவிதையில் பிடித்த வரிகளைக் கண்டுபிடித்து காரணம் எழுதுதல்.
- மலைகளைப் பற்றி பழமொழிகள் கண்டறிந்து அதனை அகரவரிசைப்படுத்தல்.
- மலைத் தொடர்பான விடுகதைகளைத் திரட்டி கொண்டுவரச் செய்தல்.

> ❒ ஒரு பாடலில் அடிகள் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.
> ❒ இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
> ❒ கடைசி எழுத்து ஒன்றி வருவது இயைபு.

## மாற்றி எழுதுங்கள்

ஒரு மொழிவெளியீட்டு வடிவத்தை வேறொரு வெளியீட்டு வடிவமாக மாற்றும் திறன் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும். ஒவ்வொரு மொழி வெளியீட்டு வடிவத்திற்கும் உரைநடை வடிவத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டும். கவிதையிலுள்ள பொருள் கண்டுபிடித்துள்ளோம். அவற்றை இங்கு பயன்படுத்தலாம்.

மலைவாழ் உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடமாக மலைகள் அமைந்துள்ளன என்ற கருத்தைமைந்த பாடல்வரிகள் எவை? என்று கேட்டு செயல்பாட்டைத் தொடங்குங்கள். இதனடிப்படையில் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து கொள்ளுங்கள். ஒரு குழுவினர் பொருள்கூற மற்றவர்கள் பொருத்தமான வரிகளைக் கூறட்டும். கூறும் கருத்துக்களைத் தொகுத்து உரைநடை வடிவில் எழுதட்டும். வகுப்பறைக் குறிப்பேட்டிலும் எழுதி வைக்கட்டும். எழுதுதலை தொடர்நிலை மதிப்பீட்டிற்கு உட்படுத்தலாம்.

## கருங்காற் குறிஞ்சி

உரையாடல் வடிவில் கொடுக்கப்பட்டுள்ள பாடப்பகுதியை மாணவர்களை வாசிக்கச் செய்யலாம். வாசித்தலைப் பொருளுடையதாகவும் கவனிக்கவும் செய்வதற்கு என்ன செய்யலாம்? பாடப்பகுதியை வாசிக்க ஆரம்பிக்கும் முன்னரே சில கேள்விகளைக் கேட்டு, வாசித்து முடித்த பிறகு பதில் கூறச் செய்யலாம்.

நீலகிரி வரையாடு மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கே உரிய சிறப்பினங்களில் ஒன்றாகும். இவை 4000 அடி உயரத்திற்கு மேலேயுள்ள மலைமுடிகளில் மட்டும் வாழும் பண்புடைன. மிகவும் அழிந்துவரும் இனங்களில் ஒன்றான இவ்விலங்கு தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களில் ஒரு சில குறிப்பிட்டப் பகுதிகளில் மட்டும் காணப்படுகிறது. வரை என்பது மலை, மலையுச்சி, குன்று, குவடு ஆகிய பொருட்களை உணர்த்துகின்றன.

சீவக சிந்தாமணி, மதுரைக் கண்டராதித்தன், நற்றிணை, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, பரிபாடல் போன்ற இலக்கியங்களில் வரையாடுபற்றிய செய்திகளைக் காணமுடிகின்றன.

மலையா என்று சங்கப்பாடல்களில் சொல்லப்படும் விலங்கு வரையாடு என்று இன்று சொல்லப்படுகிறது. நீலகிரி டார் என்று அதற்குப் பெயர். இந்த ஆடு செங்குத்தான பாறைகளில் நடக்கும் தனித்திறன் பெற்ற குளம்பு அமைப்பைப் பெற்றுள்ளது.

இராஜமலை

தொட்டபெட்டா

## மலைகள்

சங்ககால இலக்கியங்களில் மலையும் மலைசார்ந்த பகுதியும் பற்றிய ஆழமான செய்திகளை மிகுதியாகக் காணமுடிகின்றன. சங்ககாலத்தில் கூறப்படும் குறிஞ்சி நிலத்தின் முதற்பொருள், கருப்பொருள், உரிபொருளை அட்டவணைப்படுத்தலாம்.

இதற்காக பள்ளி நூலகத்தைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டைச் செய்யலாம். தயார் செய்த அட்டவணையை படைப்புத்தொகுப்பில் மதிப்பீடு செய்து பாதுகாத்து வைக்கலாம்.

பாடப்பகுதியில் குறிப்பிடப்படாத பிற மலைகளையும் அதன் சிறப்புகளையும் பற்றியத் தகவல்களையும் சேகரித்து குறிப்பாக வெளியிடவும். மலைவளங்களை மாணவர்கள் அறிந்துகொள்ள மலைவளங்கள் தொடர்புடைய குறுந்தட்டுகளைப் பயன்படுத்தலாம்.

பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் 'இமயமும் குமரியும்' எனும் கட்டுரையில் குமரிமலையும் குமரி ஆறும் இருந்தனவாகக் குறிப்பிடுவது சரியா? தவறா? என்று நிரூபிக்கும் வகையில் விவாதக் குறிப்பு எழுதுங்கள்.

குடகு மலையையும் பொதிகை மலையையும் ஒப்பீடு செய்து குறிப்பெழுதலாமே!

மலையின் சிறப்புகளையும் மலைவளக் கூறுகளையும் எடுத்துரைத்து மலைப்பயணம் சென்று வந்த மாணவர்களின் அனுபவத்தை கலந்துரையாடல் செய்து பாடப்பகுதிக்குள் செல்லலாம்.

மாமலைகளின் இயற்கைக் காட்சி, பொருள் வளம் போன்றவற்றைத் தொகுத்து வருணனைக் கட்டுரை எழுதலாம்.

### அப்பச்சி மலை

அப்பச்சி மலை என்னும் சிறுகதை, மலைகளைத் தங்கள் உறவினர்களைப் போன்று உறவுகொண்டு உலாவிமகிழும் கதாபாத்திரங்களைப் பற்றி எடுத்துரைக்கின்றது.

மாணவர்கள் கலந்துரையாடல் மூலமும் முன்னர் பெற்ற அனுபவங்களைக் கேட்டறிந்ததன் மூலமும் பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்புகள் எழுதச் செய்யலாம்.

மாணவர்கள் தயாரித்த குறிப்புகளை வகுப்பில் வாசிக்கச் செய்யுங்கள். அனைவரது குறிப்புகளிலும் உள்ள பொதுவான கருத்துகளைத் தொகுத்து ஆசிரியர் கரும்பலகையில் எழுதவேண்டும். நல்ல குறிப்புகளைப் பாராட்ட வேண்டும்.

## கருத்தரங்கக் கட்டுரை எழுதுவோம்

- தலைப்பிடுதல்
- அவைக்கு வணக்கத்தை அறிவித்தல்

- துணைத் தலைப்புகளுக்கு ஏற்றபடி கருத்துகளைத் தொகுத்தல்
- தொகுத்த தகவல்களை முறைபடுத்தி எழுதுதல்
- தகுந்த ஆதாரங்கள் மேற்கோள்களை இணைத்துக் கட்டுரைக்கு வலிமை சேர்த்தல்

இன்றைய நல்வாழ்விற்கு சிறந்தது நகர்ப்புறமா? நாட்டுப்புறமா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தலாம். பட்டிமன்றத்திற்கு தேவையானக் குறிப்புகளை பாடப்பகுதியிலிருந்தும் நூலகத்திலிருந்தும் தொகுத்தளித்து மாணவர்களுக்கு உதவலாம்.

## இலக்கணம்

| சொற்கள் | வினையெச்சம் | பெயரெச்சம் |
|---|---|---|
| வாங்கிய | | |
| மடித்து | | |
| சாப்பிட்ட | | |
| அழைத்து | | |
| வென்ற | | |
| பசித்த | | |
| வாசித்து | | |
| உயர்ந்து | | |
| ஒழுகி | | |
| ஒழுகிய | | |

பெயரெச்ச வினையெச்சச் சொற்களைத் தேர்வு செய்து பட்டியலை நிரப்பச் செய்யுங்கள்.

## அலகு மதிப்பீடு (மாதிரி)



**செயல்பாடு 1**

உலகச் சுற்றுச் சூழல் தினமாகிய ஜூன் - 5 ஐ முன்னிட்டு தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாக நடைபெற உள்ள கவியரங்கில் கவிதா பங்கு பெற உள்ளாள். அவளுக்கு உதவி செய்யும் வகையில் கவிதை ஒன்று தேர்வு செய்து கொடுங்கள்.

உலகச் சுற்றுச் சூழல் தினம் என்று கொண்டாடப்படுகிறது?

---

**செயல்பாடு 2**

தேன், கிழங்கு, கனி, காய், மணி, பொன், அகில், ஆரம் என்ற பல்வேறு பொருட்களை வாரி வழங்குகின்ற மலையை உடைத்தெறிகின்ற சமூக விரோதிகளுக்கு எதிராக பத்திரிக்கைச் செய்தி ஒன்று தயாரித்து வெளியிடுங்கள்.

மலையில் கிடைக்கும் அரியப்பொருட்கள் எவை?

---

**செயல்பாடு 3**

போடா அதிகப் பிரசங்கி! அங்கே என்ன வசதி இருக்கு. இங்கிலீசு சரியா உச்சரிக்கவாவது அங்குள்ள எவனுக்காவது தெரியுமா? பேசாம இங்கே இருந்து படில.

இப்பகுதியை தூய இலக்கிய நடையில் மாற்றி எழுதவும்.

இங்கிலீசு என்ற சொல்லின் தமிழ்ச் சொல்லைக் குறிப்பிடுக?

---

**செயல்பாடு 4**

பிரியப் போகும் ஒருவித இறுக்கமான உணர்ச்சி அங்கு நிலவியது. லேசான மழைத்துளிகள் ஒரு சில அவன் மீது தெளித்தன. தாத்தாவின் கண்ணீர்த் துளிகளை நினைத்தான் ஜெறி.

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள இத்தகைய நினைவுகள் உங்களுக்கும் ஏற்பட்டிருக்குமல்லவா? அதனை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.

ஜெறி யாரை இழந்து தவித்தான்?

---

**செயல்பாடு 5**

கண்ணன் கடைக்குச் சென்றான். காய்கறிகள் வாங்கினான். வீட்டிற்கு வரும் வழியில் முட்டையைப் போட்டு உடைத்தான்.

இவ்வாக்கியங்களில் இடம் பெற்றுள்ள வினைமுற்றுச் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

கண்ணன் எங்கு சென்றான்?

---

அலகு - 2 (AT)

# கொட்டும் முரசே

## அலகு அறிமுகம்

கலைகள் மனிதனின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடாகும். அவன் தான் ரசித்ததை பிறரும் ரசிக்கும் வண்ணம் படைத்து காலந்தோறும் விதவிதமான கலைச் செல்வங்களை உலகிற்கு பரிசளித்துச் செல்கிறான். வாழும் சூழலுக்கு ஏற்றபடி பேசும் மொழிக்கு உகந்தபடி கலைகள் காலந்தோறும் வேறுபட்டு வளர்கின்றன.

கேரளக் கலைகள் குறித்த ஆழ்ந்த அறிவின்மை என்ற பிரச்சனையைத் தவிர்க்கும் வகையிலும் இதன் அறிவினை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையிலமைந்த பாடப்பகுதிகள் இவ்வலகில் தரப்பட்டுள்ளன. இக்கலைகள் இரசிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்குக்கு உள்ள முக்கியப் பங்கை உணர்வதற்கும் கலைகளைப் பாதுகாக்க வேண்டும் எனும் எண்ணம் மாணவர்கள் மனதில் உருவாவதற்கும் இவ்வலகின் பாடப்பகுதிகளும் அவற்றோடு தொடர்புடைய செயல்பாடுகளும் தரப்பட்டுள்ளன. வகுப்புச் சூழலுக்கும் வட்டாரச் சூழலுக்கும் ஏற்ப இப்பிரச்சினையை மாணவர் மனதில் எழுப்பி அதற்கானத் தீர்வும் காண உதவும் வகையிலான பாடப்பகுதிகள் இவ்வலகில் வைக்கப்பட்டுளளன.

| கருத்துகள்/திறன்கள் | செயல்பாடுகள் | கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| தகவல்களை சேகரித்தல், தொகுத்தல், உவமை, உருவகம், கற்பனை போன்றவற்றைப் பயன்படுத்த அறிதல். கற்பனைத் திறன் பெறல். | வருணனைக் குறிப்பு. | விழாக்கள், ஊர்வலங்கள் முதலான நிகழ்ச்சிகளை வருணனை செய்து வருணனைக் குறிப்பு எழுதுகிறார்கள். |
| பழங்கால இசைக்கருவிகளின் செய்திகளைத் தொகுத்தல், வகைப்படுத்தல். | குறிப்பு தயார் செய்தல். | பண்டைய இசைக் கருவிகளை அறிந்து குறிப்பு எழுதுகிறார்கள். |
| நேரில் கண்டறிதல், கருத்துகளைத் தொகுத்து எழுதுதல். | அனுபவக் குறிப்பு. | சுய அனுபவங்களின் அடிப்படையில் அனுபவக் குறிப்பு எழுதுகிறார்கள். |
| கருத்துகளைத் தொகுத்தல், மேற்கோள்களைப் பயன்படுத்துதல், வகைப்படுத்துதல், கட்டுரை எழுதுதல். | கட்டுரை எழுதுதல். | கலைகள் பண்பாட்டின் அடையாளங்கள் என்பதை அறிந்து அது குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள். |



**நேரம்:**

இவ்வலகை கற்பிக்கத் தேவையான காலம் 20 பிரிவு வேளைகள். (சுமார்)

## கற்றல் துணைக் கருவிகள்



- இசைக் கருவிகள் மற்றும் கோவில் சிற்பக் கலைகளின் புகைப்படங்கள்.
- கலைகள் தொடர்பான குறுந்தட்டு.
- பத்திரிக்கை செய்திகள்.
- தொடர்புடைய கதைகள், கவிதைகள், கட்டுரைகள், செய்தித் துணுக்குகள்.
- 

## நுழைவுச் செயல்பாடு



திருவிழாவில் கலந்துகொண்ட அனுபவங்களையும் திருவிழாக் காட்சிகளையும் மாணவர்களிடம் கேட்டறிந்து கலந்துரையாடல் செய்தல். திருவிழாக்களில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளைப் பற்றியும் அவற்றுடன் மாணவர்களின் ஈடுபாட்டையும் கேட்டறிதல். இதுபோன்ற கலந்துரையாடல் களின் மூலம் பாடப்பகுதிக்குள் நுழைதல்.

## ஒப்பீட்டுக் குறிப்பெழுதுதல்



மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவும். இரு குழுக்களுக்கு தமிழகக் கோவில்களில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள்/கேரள கோவில்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் எனும் இரு தலைப்புகள் கொடுத்துச் செய்திகளைத் திரட்டக் கூறவும். செய்திகளை வகுப்பில் வாசிக்கச் செய்து தொகுத்து இவ்விரு கருவிகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிடக் கூறலாம். ஆசிரியர் அவற்றை மதிப்பீடு செய்து முடிவுக்கு வரலாம்.

| தமிழகக் கோவில்களில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் | கேரளக் கோவில்களில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் |
|---|---|
| வீணை, யாழ், புல்லாங்குழல் | செண்டை |
| உடுக்கை | உருமி |
| | உடுக்கை |
| கொம்பு, மத்தளம், முரசு, தண்ணும்மை | மத்தளம் |
| மிருதங்கம், தபேலா, ஹார்மோனியம், கஞ்சீரா, கதம் | |

## இரசனைக் குறிப்பு எழுதுதல்



- படலை மனதிற்குள் இரண்டோ மூன்றோ முறை வாசிக்கச் செய்தல். பிறகு சில கேள்விகளை எழுப்பி விடைகளை வரவழைத்தல்.
- இப்பாடல் உங்களுக்கு பிடித்திருக்கிறதா?
- படிக்கக் கேட்க இரசிக்கும்படி இனிமையாக உள்ளதா?
- பிடித்த வரிகள் எவை?
- இரசிக்கக் காரணம் என்ன?
- எந்தெந்தசொற்கள் கருத்துக்கள் சுவையாக உள்ளன?
- சுவையாக இருப்பது பொருளா? வடிவமா? அமைப்பா?

## இரசனைக் குறிப்பு



அதிசய மாளிகை என்ற பாடப்பகுதியில் சுற்றுலாவின் சிறப்புகளை அறிந்திருப்பீர்கள். இதைப் போன்று மாணவர்களாகிய நீங்கள் கண்டுகளித்த காட்சிகளை இரசனைக் குறிப்பாக வெளியிடுங்கள். குறிப்புகளை முறையாக எழுதுவதற்கு ஆசிரியர் தேவையான உதவிகளைச் செய்யலாம். பின்வரும் குறிப்புப் பட்டியலை நல்கி மாணவர்கள் கூறிய கருத்துகள் எவற்றுடன் பொருத்துகின்றன என்பதைக் கண்டறிந்து எழுதச் செய்தல்.

## இரசனைக் குறிப்பு பட்டியல்

- வந்த சொல்லே மீண்டும் வந்து சுவையூட்டுதல்.
- எதுகை மோனை அமைந்திருத்தல்
- அணிநயம்
- பொருள் நயம்
- உத்தி
-
-

**மாதிரி**

**வளமபரம**

***மாபெரும் இலக்கியமன்ற கலைவிழா***

***பள்ளி இலக்கிய மன்றம்***

இடம்:
நாள்:
நேரம்:
சிறப்பு விருந்தினர்:

**அனைவரும் வாரீர்! ஆதரவு தாரீர்!!!**

## நிகழ்த்துக்கலை

நிகழ்த்துக்கலை (Performing art) என்பது அரங்கொன்றில் கலைஞர், ஒருவர் அல்லது பலர், நமது முகம், உடல் அல்லது இருப்பு கொண்டு நிகழ்த்துவதற்குரியதான கலைவடிவம் ஆகும். இது ஓவியம், சிலைவடிப்பு, சிற்பம் மற்றும் எழுத்து போன்ற பிற ஊடங்களில் தமது கலைத்திறமையை வடிப்பதிலிருந்து வேறுபட்டதாகும். இது பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாயினும் பார்வையாளர்கள் முன்னிலையில் நேரடியாக நிகழ்த்திக் காட்டும் கலைவடிவையே குறிக்கும்.

நுண்மையான உறுப்புகளையும், நுண்ணிய உணர்வுகளையும் கொண்டது நுண்கலை, கவிதை, இசை, ஆடல், ஓவியம் முதலியன இதனுள் அடங்கும். ஒரு கலைஞனின் நுண்கலை வடிவின் சிறப்புக் கூறுகள் பார்வையாளர்களின் மத்தியில் வெளிப்படுத்தப்படும் போது அது நிகழ்த்துக்கலையாக வடிவம் கொள்கிறதெனலாம்.

**பண்டையக் கால இசைக் கருவிகள்**

உருமி, நப்பு, நாதஸ்வரம், மிருதங்கம், கஞ்சீரா, கதம், உடுக்கை, செண்டை, கொம்பு, முரசு, தண்ணும்மை, தபேலா, கதம், யாழ், புல்லாங்குழல், வீணை

“மலயாளக் காற்றே வா” என்ற கவிதையைப் போன்று கேரளத்தைப் பற்றிய மற்றொரு கவிதை.

## கேரள நாடு!

கேரள நாடு நல்ல கேரள நாடு – மக்கள்
கேள்வி கேட்டு உயரும் நல்ல கேரள நாடு

மாமலை நாடு நல்ல மாமலை நாடு – மக்கள்
மனம்போல வாழ்கின்ற மாமலை நாடு.

மலையாளமொழி அன்னை மனம் மகிழவே
மனம்போல கவிபாடும் மலையாளத்தில்

அலைப்பாயும் அரபிக்கடலுக்கு அழகு சேர்த்திட – நல்
ஆனமலை அதற்காகக் குடை பிடித்திட

கதகளியும் கவின் கலையும் கை கோர்த்திட – மக்கள்
கவிமழையால் மனம் மகிழ கவிபாடிட

தெய்யமும் திரயெல்லாம் சுதி சேர்த்திட – மக்கள்
திருவாதிரை களித்திங்கு உறவாடிட

ஓட்டம் துள்ளல் ஆடி மக்கள் உவகை கொண்டிட – நல்ல
கூடி ஆட்டத்தாலே மக்கள் குளுமை கண்டிட – நல்ல

மோகினி ஆட்டமாடி மோகம் கொண்டிட – நாளும்
மோகத்தியே மக்கள் உள்ளம் தாவிக்களித்திட

மாமலைகளாலே மக்கள் மகிழ்வு கொண்டிட – நாளும்
மனம் கவரும் பெரியாறு மகிழ்வு தந்திட

பாரதப்புழை ஓடி மக்கள் உயிர் காத்திட – நல்ல
பம்பையாறு பாய்ந்திங்கு வளம் சேர்த்திட

மா பலா வாழையெல்லாம் வரவேற்றிட
மன மகிழும் இஞ்சி மஞ்சள் கொஞ்சி ஆடிட

ஏலமா இலவங்கம் எங்கும் தோன்றிட – நல்ல
ஏலக்காய் மணம்வீசி எழில் ஓங்கிட

பூமியிலே சொந்தம் என்று மக்கள் சொல்லிட
பூமகளும் அதைக்கேட்டு இசைபாடிட

மாவேலி மன்னன் இங்கு வந்து பார்த்திட
மனமெல்லாம் உவகையாலே பொங்கி ஓங்கிட

எழிலாலே சிறந்து ஓங்கும் சேரநாடு
எல்லோரும் வரவேற்கும் எந்தன் நாடு

நற்பயனால் நான் பிறந்தேன் இந்த நாட்டிலே
நாள்தோறும் போற்றுகின்றேன் எந்தை வீட்டையே

**முனைவர். சு. இராசேந்திரன்**

### ஆசிரியர் உதவிக்கு

கேரளத்திற்கு உரியவை: கதகளி, தெய்யம், திருவாதிரை, ஓட்டம்துள்ளல், மோகினி ஆட்டம், மாவேலி, பராதப்புழை, பெரியாறு, பம்பையாறு

## கும்மிப்பாடல்

- பெண்கள் வட்டமாக நின்று கையடித்து ஆடுவது.
- கும்மிப்பாடலில் பங்குபெறும் பெண்களின் எண்ணிக்கையில் வரையறையில்லை.
- சிறியவர்களும் பெரியவர்களும் பங்கேற்கலாம்.
- சூழலுக்கு ஏற்ப பாடுபொருள் மாறுபாட்டைப் பெறும்.
- சமுதாயக் கருத்துக்கள் அமைந்த பாடல்களும் பரவலாகக் காணப்படுகின்றன.
- கிராமங்களில் இதற்கு மிகுந்த செல்வாக்குண்டு.
- ஆடை அலங்காரங்களுக்கு முக்கியத்துவம் இல்லை.
- இது ஒரு நாட்டுப்புறக் கலையாகும்.

## ஒப்பீடு செய்தல்

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவும். இரு குழுக்களுக்கும் கும்மி 1 திருவாதிரை எனும் இரு தலைப்புகள் கொடுத்துச் செய்திகளைத் திரட்டக் கூறவும். நூலகத்தைப் பயன்படுத்தலாம். மாணவர்கள் திரட்டிய செய்திகளை வகுப்பில் வாசிக்கச் செய்து மதிப்பீடு செய்யலாம்.

குறிப்புகள்:

கும்மி/திருவாதிரை – தோன்றியவிதம் நடத்தப்படும் காரணம் / காலம் – நடிப்பவர் பற்றி – நடத்தப்படும் விதம் – ஒப்பனைப் பொருட்கள் – பயன்படுத்தப்படும் பாடுபொருள்.

கலைகளுக்குள் ஒற்றுமையை வளர்க்கும் தனித்தன்மையுண்டு. பண்பாட்டுக் கூறுகளை கட்டிக் காக்கக் கூடியவை. இதனடிப்பையில் கேரளாவின் மிகத் தொன்மைகாலம் முதல் உள்ள திருவாதிரை, மார்கங்களி, ஒப்பனை போன்ற கலைகளின் ஒற்றுமையை விளக்கும் வகையில் சிறுகட்டுரை எழுதவும். கட்டுரை எழுதுவதற்கான குறிப்புகளை ஆசிரியர்கள் வழங்கி மாணவர்களுக்கு உதவலாம்.

திருவாதிரைக் களி
ஒப்பனை → இக்கலைகளின் விதிமுறைகளைப் பட்டியிலிடுங்கள்
மார்கங்களி

## படத்தொகுப்பு தயார் செய்தல்

பத்திரிக்கைகள் இதழ்களில் வெளிவந்த கேரள தமிழகக் கலைகளைப் பற்றிய படங்களை சேகரித்து மாணவர்களிடம் பள்ளியில் நடைபெறும் கண்காட்சி விழாவில் வெளியிடக் கூறலாம்.

### ஆசிரியருக்கு

பத்திரிக்கைகள், இதழ்கள், நூலகம், இணையதளம் போன்றவற்றிலிருந்து நாட்டுப்புறக் கலைகள் பற்றிய படங்களை சேகரித்து வைத்துக் கொள்ளவும்.

### செயல்பாடு 1

'பூரம்' என்பது கேரளாவிலுள்ள திருச்சூர் என்ற இடத்தில் கொண்டாடப்படும் ஓர் திருவிழாவாகும். இவ்விழாவின்போது வான வேடிக்கை, மேளதாளங்கள், குடைமாற்றம், நெற்றிப்பட்டம் சூட்டிய யானைகள், பஞ்சவாத்தியங்கள் போன்றவை முக்கிய இடம் பெறுகின்றன. இக்காட்சிகள் மக்களின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன.

இக்காட்சிகளை வருணித்து வருணனைக் கட்டுரை தயாரிக்க மாணவர்களுக்கு உதவுங்கள்.

? பூரம் என்ற திருவிழா கொண்டாடப்படும் ஊர் எது?

### செயல்பாடு 2

முதன்மையான இசைக்கருவிகளுள் ஒன்று யாழ். பண்டைக்காலம் முதல் இன்றுவரை இக்கருவியை பயன்படுத்தி வருகின்றனர். சங்க காலத்தில் பாணர்கள் யாழ் வாசிப்பதில்

கைதேர்ந்தவர்களாக திகழ்ந்தார்கள். இக்கருவியைக் குறித்தும் இதனை இசைக்கும் பாணர்கள் குறித்தும் சங்ககால நூற்களில் காணமுடிகிறது.

யாழ் பற்றிய செய்திகளை குறிப்பிடும் சங்க இலக்கிய நூற்களில் செய்திகளைத் திரட்டி சிறு கட்டுரை எழுதுங்கள்.

? சங்ககாலத்தில் யாழ் என்ற இசைக்கருவியை வாசித்த இனத்தவர்களின் பெயர் என்ன?

**செயல்பாடு 3**

சுற்றுலா சென்றுவந்த அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் சொற்பொழிவு ஒன்று தயார் செய்யுங்கள்.

**செயல்பாடு 4**

தமிழகத்தின் உழவர் திருநாளாக பொங்கல் கொண்டாடப்படுகிறது. தைமாதத்தில் கொண்டாடப்படும் இவ்விழாவிற்கு வாழ்த்து அட்டை ஒன்று தயார் செய்யங்கள்.

? எந்த மாதத்தில் பொங்கல் திருவிழா கொண்டாடப்படுகிறது?

**செயல்பாடு 5**

தென்னைமரங்கள் நிறைந்த நாடு கேரளம். இங்கு இயற்கைச் செல்வங்கள் நிறைந்து காணப்படுகிறு. கேரளம் மலைநாடு என்றும் அழைக்கப்படுகிறது. இறைவனின் சொந்த நாடாகக் கருதப்படும் கேரளத்தைப் பற்றி சிறு கவிதை ஒன்று எழுதவும்.

? இறைவனினஅ சொந்த நாடு என்று அழைக்கப்படும் மாநிலம் எது?